24 JUL 2017
EASTERN UNIVERSITY, SRI LANKA

# முன்பள்ளிக் கல்வியில் நிருவாகக் கட்டமைப்பும் முகாமைத்துவமும் செலுத்தும் செல்வாக்கு: போரதீவுப் பற்று முன்பள்ளிகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
20 MAR 2017
Vantharumoolai
Chenkalady

திரு.முத்துலிங்கம் கோவிந்தராசா
**Registration No : EU/PGS/2014/MED/77**

MED103
Thesis
Library - EUSL

EASTERN UNIVERSITY SRI LANKA
PER ARDUA AD SCIENTIAM

103

கல்வி, பிள்ளை நலத்துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

2016

PROCESSED
Main Library, EUSL

## ஆய்வுச் சுருக்கம் (Abstract of the Study)

மனித இனமானது கட்டமைக்கப்பட்ட அடிப்படையில் கூட்டொருமைப்பாட்டுடன் வாழ்வதற்கு அவனது வளர்ச்சி மற்றும் விருத்தியின் போதான நடத்தை மாற்றங்களே ஏதுக்களாகின்றன. இவ்வாறான நடத்தை மாற்றம் ஏற்படுவதற்கு கல்வியின் அடிப்படை இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஆய்வானது முன்பள்ளிக் கல்வியில் நிருவாகக் கட்டமைப்பும் முகாமைத்துவமும் செலுத்தும் செல்வாக்கு தொடர்பான கண்டறிவுகளை மேற்கொண்டு அவை தற்போதைய முன்பள்ளி நடைமுறைகளில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்துகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதை நோக்கமாகக் கொண்டே முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வானது மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேசத்தில் உள்ள 63 முன்பள்ளிகள் கஸ்டப் பிரதேசம், அதிகஸ்டப் பிரதேசம் எனும் அடிப்படையில் படையாக்கம் செய்யப்பட்டு அவற்றிலிருந்து 12 அதிகஸ்டப் பிரதேச முன்பள்ளிகள் வசதிமாதிரி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றில் கற்பிக்கும் 21 முன்பள்ளி ஆசிரியைகளும் அவற்றை நிருவகிக்கும் அமைப்புக்களும் நோக்கமாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். வினாக்கொத்து, அவதானம் எனும் ஆய்வுக் கருவிகளினூடாக முன்பள்ளிக் கல்வியில் நிருவாகக் கட்டமைப்பும் முகாமைத்துவமும் செலுத்தும் செல்வாக்கு தொடர்பாக அளவுரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பெறப்பட்ட தரவுகள் (கலப்பாய்வு முறையில்) பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவை வகுப்பாக்கம் செய்யப்பட்டு அட்டவணையாக்கம், சலாகை வரைபு, கோட்டு வரைபு, முப்பரிமாண வரைபடங்கள் மூலமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

தரவுகளின் பகுப்பாய்வின் மூலமாக பிள்ளைகளில் அக்கறை செலுத்தப்படுவதோடு முன்பள்ளிச் செயற்பாடுகளில் முன்னாயத்த நடைமுறைகள் பின்பற்றப்படுகின்ற போதிலும் மாணவர் செயற்பாட்டிற்கான போதியளவானதும் பொருத்தமானதுமான இட ஒதுக்கீடு காணப்படவில்லை என்பதுடன் மாணவர்களதும் ஆசிரியர்களதும் பதிவுகளில் முழுமைத் தன்மை காணப்படாமை, பொருட் பாதுகாப்பில் இடர்பாடு காணப்படல், ஆசிரியர் மீது போதிய கவனமின்மை, முன்பள்ளிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை, முன்பள்ளிக் கல்விக்குப் பொருத்தமற்ற வகுப்பறைச் சூழல், வளப்பற்றாக்குறையுடன் முன்பள்ளிகள் செயற்படுதல், முறையான வெளியகத் தொடர்புகள் பேணப்படாமை, ஆசிரியரின் சுயமதிப்பீட்டு ஆவணங்கள் பேணப்படாமை, போதிய கண்காணிப்பு நடைமுறைகள் பின்பற்றப்படாமை, பெற்றார் விழிப்புணர்வு அற்றிருத்தல், இலத்திரனியல் உபகரணங்கள் பயன்படுத்தப்படாமை, சுகாதார முறையிலான செயற்பாடுகளைப் பின்பற்றாமை, திடீர் விபத்துக்களை எதிர்கொள்வதற்கான தயார்நிலை காணப்படாமை போன்றன

இனங்காணப்பட்டுள்ளன. இந்நிலைமைகள் முன்பள்ளிக் கல்வியை முன்னெடுத்துச் செல்வதில் தடைகளை ஏற்படுத்துகின்றன.

மேற்படி முடிவுகளின்படி முன்பள்ளிகளது வகுப்பறைச் சூழல் கற்றலுக்குப் பொருத்தமுடையதாக மாற்றியமைக்கப்படல் வேண்டும், முன்பள்ளிப் பிள்ளைகளதும் ஆசிரியர்களதும் பதிவுகள் விசாலமானதாகவும் இற்றைப்படுத்தப் பட்டதாகவும் மாற்றியமைக்கப்படல் வேண்டும். அத்தோடு முன்பள்ளி ஆசிரியர்கள் தொடருறு கல்வியில் தம்மை ஈடுபடுத்துதல் சிறப்பாவதோடு அவர்கள் தம்மைச் சுய மதிப்பீடு செய்வதற்கான ஆற்றலையும் பெற்றிருத்தல் சிறப்பாகும். மாத்திரமன்றி முன்பள்ளி வளங்களின் ஒதுக்கீட்டை அதிகரித்தல் இன்றியமையாததாகும். இதற்காக வெளியகத் தொடர்புகளைச் சிறப்பாக மேற்கொள்ளல் பயனுடையதாகின்றது. மாத்திரமன்றி பெற்றோருக்கான விளிப்புணர்வுச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துதல், இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்திக் கற்பிக்க வழிவகை செய்தல், முன்பள்ளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், அவற்றின் சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்துதல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு கிழக்கு மாகாண சபையும், மாகாணக் கல்வித் திணைக்களமும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்வது இன்றியமையாததாகின்றது.

# பொருளடக்கம் (Contents)

உறுதிமொழி (Declaration) ........................................ I

சான்றிதழ் (Certification) ........................................ II

நன்றி நவிலல் (Acknowladgement) ........................................ III

ஆய்வுச் சுருக்கம் (Abstract of the Study) ........................................ IV

பொருளடக்கம் (Contents) ........................................ VI

அட்டவணைகள் (List of Tables) ........................................ XI

உருக்கள் (List of Figures) ........................................ XII

**அத்தியாயம் 01 அறிமுகம்**

1.0 அறிமுகம் ........................................ 1

1.1 ஆய்வின் பின்னணி ........................................ 2

1.2 ஆய்வின் பிரச்சனைகள் ........................................ 3

1.3 ஆய்வின் நோக்கம் ........................................ 6

1.4 ஆய்விற்கான நியாயம் ........................................ 6

1.5 ஆய்வின் முக்கியத்துவம் ........................................ 8

1.6 அருஞ்சொற்பதங்களின் விளக்கம் ........................................ 10

1.7 சாராம்சம் ........................................ 11

**அத்தியாயம் 2 இலக்கிய மீளாய்வு**

2.0 அறிமுகம் ........................................ 12

2.1 பதவிளக்கமும் விருத்தியும் ........................................ 12

2.1.1 ஆரம்பப் பிள்ளைப்பருவம் (Early Childhood) ........................................ 12

2.1.2 முன்பள்ளி ........................................ 13

2.1.3 அடிப்படைக் கொள்கை அல்லது தத்துவங்களை அனுபவமாக்கல் .............. 17
2.2 கல்வி நிலைமை .............................................................. 22
2.2.1 இடத்தைத் தெரிவு செய்தல் ................................................ 24
2.2.2 பிளேட்டோவின் கருத்து (427 – 341) .................................... 32
2.2.3 ரூசோவின் கருத்து (1712 – 1774) ...................................... 33
2.2.4 ஜோன் டூயியின் கருத்து (1859 – 1952) ................................ 34
2.2.5 எரிக் எரிக்சனின் கருத்து ................................................. 35
2.3 முன்பள்ளி நிருவாகக் கட்டமைப்பு ........................................ 46
2.4 முன்பள்ளி முகாமைத்துவம் ................................................ 51
2.5 முன்பள்ளி நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்தை மதிப்பிடல் ............ 64
2.6 முன்பள்ளி நிருவாகம் மற்றும் முகாமைத்துவக்கட்டமைப்புக்கிடையிலான இடைத் தொடர்புகள் .................................................... 68
2.7 சாராம்சம் ..................................................................... 70

## அத்தியாயம் 3 ஆய்வு முறையியல

3.0 அறிமுகம் ...................................................................... 71
3.1 பொது நோக்கமும் சிறப்பு நோக்கங்களும் ................................. 71
3.2 ஆய்வின் ஒழுங்கமைப்பும் அணுகுமுறையும் ............................... 72
3.3 சனத்தொகை .................................................................. 74
3.3.1 ஆய்வுப் பிரதேசம் ........................................................... 74
3.3.2 மாதிரித் தெரிவு ............................................................ 75
3.3.3 மாதிரித்தெரிவினை நியாயப்படுத்தல் .................................... 77
3.4 ஆய்வுக் கருவிகளும் தரவுகளைச் சேகரித்தலும் ........................... 78
3.4.1 அளவிடும் நுட்பங்கள் ....................................................... 79
3.4.2 ஆய்வுக் கருவியின் தெரிவு ................................................. 79
3.4.3 ஆய்வுக் கரவிகளை அமைத்தல் .............................................. 79
3.4.4 ஆய்வுக்கருவியினை முன்னாயத்தம் செய்தல் ............................... 80
3.4.5 தரவுகளைச் சேகரிக்கும் முறை ............................................. 80

UNIVERSITY, SRI LANKA

3.5 பகுப்பாய்வு முறைகள் ........................................................ 81

3.6 சாராம்சம் ........................................................ 81

## அத்தியாயம் 04 தரவுகளின் பகுப்பாய்வும் வியாக்கியானமும் கலந்துரையாடலும்

4.0 அறிமுகம் ........................................................ 82

4.1 போரதிவுப்பற்று முன்பள்ளிக் கல்வியின் நிலைமை ........................................................ 82

4.1.1 ஆசிரியர்கள் மற்றும் நிறுவனங்கள் அமைப்புக்களுக்கான வினாக்கொத்தும் அவதானிப்புப் படிவமும் ........................................................ 83

4.2 போரதீவுப்பற்று முன்பள்ளிகளின் நிருவாக மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பு ........................................................ 93

4.3 போரதீவுப்பற்று முன்பள்ளிகளின் நிருவாக மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள் ........................................................ 103

4.4 முன்பள்ளிக் கல்வியின் நிருவாக முகாமைத்துவக் கோட்பாடுகளுக்கும் போரதீவுப்பற்று முன்பள்ளிகளின் நிருவாக முகாமைத்துவ நடைமுறைகளுக்கும் இடையிலான இடைத்தொடர்புகள் ........................................................ 112

4.5 போரதீவுப்பற்று முன்பள்ளிக் கல்வியின் விருத்திக்கு பாடசாலை வசதிகளில் நிருவாகக் கட்டமைப்பு மற்றும் முகாமைத்துவம் செலுத்தும் செல்வாக்கு..... 123

4.6 சாராம்சம் ........................................................ 131

## அத்தியாயம் 5 முடிவுகளும் விதந்துரைப்புகளும்

5.0 அறிமுகம் ........................................................ 132

5.1 போரதீவுப்பற்று முன்பள்ளிக் கல்வியின் நிலைமை ........................................................ 132

5.2 போரதீவுப்பற்று முன்பள்ளிகளின் நிருவாக மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பு ........................................................ 135

5.3 போரதீவுப்பற்று முன்பள்ளிகளின் நிருவாக மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள் ........................................................ 137

5.4 முன்பள்ளிக் கல்வியின் நிருவாக முகாமைத்துவக் கோட்பாடுகளுக்கும் போரதீவுப்பற்று முன்பள்ளிகளின் நிருவாக முகாமைத்துவ நடைமுறைகளுக்கும் இடையிலான இடைத்தொடர்புகள் ........................................................ 140